# FORM-3
# MINUTES OF THE COUNCIL MEETINGS
## குளச்சல் நகராட்சி

குளச்சல் நகராட்சி மன்றத்தின் சாதாரணக்கூட்டம் 2015 ஏப்ரல் திங்கள் 23–ம் நாள் (23.04.2015) வியாழக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு நகர்மன்ற கூட்ட அரங்கில் வைத்து நடைபெற்றது.

முன்னிலை:

நகர்மன்ற தலைவர்
குளச்சல் நகர்மன்றம்.

**பொருள் எண். 1**

குளச்சல் நகராட்சியின் **2014–15** ஆம் ஆண்டிற்கான நிர்வாக அறிக்கை மன்றத்தின் பார்வைக்கும், ஒப்புதலுக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.
**அ.குறிப்பு** : பதிவு செய்யலாம்.

(ந.க.எண்.சி1/1921/2004)

**தீர்மான எண் : 1173 – அ.கு. ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது. பதிவு செய்யப்பட்டது.**

**பொருள் எண். 2**

குளச்சல் நகராட்சியின் 2012–13–ம் ஆண்டுக்கான ஆண்டு கணக்கு கன்சல்டன்ட் திரு.ஸ்ரீனிவாசன் அவர்களால் முடிக்கப்பட்டு தணிக்கை துறைக்கு அனுப்பப்பட்டு தணிக்கையும் முடிவுற்றுள்ளது. 2012–13–ம் ஆண்டு கணக்கு முடித்த வகையில் ரூ.20,000/– வழங்க கேட்டுள்ளார். மேற்படி தொகை வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.
**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.பி1/2585/2009)

**தீர்மான எண் : 1174 – அ.கு. ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 3**

இந்நகராட்சி ஈப்பு வாகனம் TN-75.K.6526 –ல் ஏற்பட்ட பழுதுகளை சரி செய்வதற்காக மகேந்திரா & மகேந்திரா –வின் அங்கீகாரம் பெற்ற KODAI CARS (P) LTD., நாகர்கோவில் நிறுவனத்தில் வாகனம் சோதனை செய்யப்பட்டு, பெறப்பட்ட விலைப்புள்ளியின் அடிப்படையில் தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.30,000/–க்கு, இந்நகர்மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று மேற்படி நிறுவனத்தின் மூலம் பழுதுகள் சரி செய்யப்பட்டு, அதற்கான செலவுத் தொகை ரூ.29,063/–ஐ இந்நகராட்சி பொது நிதியில் இருந்து வழங்கியதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.
**அ.குறிப்பு** : இந்நகராட்சி அலுவலக பணிகளில் மேற்படி வாகனத்தின் அவசியத்தை கருத்தில் கொண்டு, உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.30,000/–க்கு இந்நகர்மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று M/s. KODAI CARS (P) LTD., நாகர்கோவில் நிறுவனத்தின் மூலம் பழுதுகளை சரி செய்து அதற்கான தொகையினை வழங்கியதற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/7057–1/2011)

**தீர்மான எண் : 1175 – அ.கு. ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 4**

இந்நகராட்சி குடிநீர் வினியோக பணிகளுக்காக பயன்படுத்தப்பட்ட ரூ.1,70,000/– மதிப்பிலான பழைய பொருட்கள் மற்றும் தெருவிளக்கு பராமரிப்பு பணிகளுக்காக பயன்படுத்தப்பட்ட ரூ.46,000/– மதிப்பிலான பழைய பொருட்கள் ஆகியவற்றிற்கு கடந்த 25.02.2015, 12.03.2015, 20.03.2015 மற்றும் 31.03.2015 ஆகிய தேதிகளில் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், ஏல முன்வைப்புத் தொகை செலுத்தி ஏலத்தில் கலந்து கொண்டவர்கள் மற்றும் ஒப்பந்தப்புள்ளி அளித்தவர்கள் அரசாங்க மதிப்பிற்கு குறைவாக, அதாவது குடிநீர் வினியோக பொருட்களுக்கு அதிகபட்ச ஏலக் கேள்வியாக ரூ.1,04,000/– மற்றும் தெருவிளக்கு பராமரிப்பு பொருட்களுக்கு அதிகபட்ச ஏலக் கேள்வியாக ரூ.30,100/– ம்

இதுவரையிலும் கேட்கப்பட்டுள்ளது. மேலும் குடிநீர் வினியோக பொருட்களுக்கு ரூ.90,000/– மற்றும் தெருவிளக்கு பராமரிப்பு பொருட்களுக்கு ரூ.30,151/–க்கும், ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டுள்ளது. மேற்படி ஏலக்கேள்வி மற்றும் ஒப்பந்தப்புள்ளி தொகை அரசாங்க மதிப்பைவிட குறைவாக உள்ளதால் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியை இறுதி செய்ய இயலாது. எனவே மேற்காணும் இனங்களின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்வதற்காக முன் வைப்பு தொகை செலுத்தியுள்ளவர்களுக்கு, தொகையினை திருப்பி வழங்குவதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/8058/2011)

**தீர்மான எண் : 1176 – அ.கு. ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 5**

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.17–ல் கணியாக்குடி முதல் பள்ளிவிளாகம் வரை அமைந்துள்ள வடிகால் ஓடையின் பக்கசுவர் மற்றும் தரை பகுதிகள் சேதமடைந்துள்ளதால், கழிவுநீர் செல்ல முடியாமல் தேங்கியுள்ளது. மேலும் மழை காலங்களில் வடிகால் ஓடையில் அடைப்பு ஏற்பட்டு சாலையின் மேல் கழிவுநீர் செல்வதால், சுகாதாரக் கேடு ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே பொது நலன் கருதி, மேற்படி பகுதியில் புதிதாக மழைநீர் வடிகால் ஓடை மற்றும் மூடு சிலாப் அமைப்பதற்கு ஆகும் மதிப்பீட்டுத் தொகை ரூ.3,50,000/– க்கும், மேற்படி பணியினை இந்நகராட்சி பொது நிதியின்கீழ் மேற்கொள்வதற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/357/2015)

**தீர்மான எண் : 1177 – அ.கு. ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 6**

இந்நகராட்சி அலுவலக கட்டிட மேற்கூரையில் சூரிய ஒளியிலிருந்து 3 KW மின்சாரம் பெறுவதற்கான சூரிய ஒளி தகடுகள் நிறுவுவதற்கான மதிப்பீட்டு தொகை ரூ.5.00 இலட்சத்திற்கும், மேற்படி பணியினை இந்நகராட்சி பொதுநிதியின் கீழ் மேற்கொள்வதற்கும் இந்நகர்மன்றம் தனது தீர்மானம் எண்.1136 நாள் 26.02.2015–ன் மூலம் ஏற்கனவே ஒப்புதல் வழங்கியுள்ளது. அதன் அடிப்படையில் 10.04.2015–ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த விவரம் பின்வருமாறு :

| | | |
|---|---|---|
| 1. | M/s.Sri Ram Engineering, Tirumangalam, Madurai District. | மதிப்பீட்டு விகிதம். |
| 2. | M/s.Surya Shakthi Equipments Pvt.Ltd, Sivakasi, | மதிப்பீட்டைவிட 0.63% அதிகம். |
| 3 | M/s.Mas Solar System Pvt.Ltd, Coimbatore. | மதிப்பீட்டைவிட 1.56% அதிகம். |

மேற்காணும் ஒப்பந்தப்புள்ளிகளில், M/s.Sri Ram Engineering,Tirumangalam நிறுவனம் அளித்துள்ள மதிப்பீட்டு விகித ஒப்பந்தப்புள்ளியை ஏற்று, பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்

(ந.க.எண். இ1/179/2013)

**தீர்மான எண் : 1178 – அ.கு. ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 7**

இந்நகராட்சிக்குட்பட்ட துறைமுகத்தெரு புனித காணிக்கை மாதா திருத்தலம் அருகில் மற்றும் காமராஜர் பேருந்து நிலையம் அருகில் புதிதாக கட்டப்பட்ட மேல்நிலை நீர்தேக்கத் தொட்டிகளில் ஏற்பட்ட நீர்கசிவுகள் தொடர்பாக, திரு.ஆர்.சதீஷ் பாரதி, முன்னாள் நகர்மன்ற உறுப்பினரால் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் தொடரப்பட்ட வழக்கு எண். W.P.(MD) No.17254 of 2014 – ன் மீது வழங்கப்பட்ட தீர்ப்பின் படி, கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவரால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் அடிப்படையில், மேற்படி இரண்டு மேல்நிலை நீர்தேக்கத் தொட்டிகளின் நீர்க்கசிவுகளை ஒப்பந்ததாரர் மூலம் சரி செய்யும் பணி மேற்கொள்ளப்பட்ட 27.02.2015 முதல் 13.03.2015 வரையிலான15 நாட்களுக்கு வாடகை லாரி

மூலம் குடிநீர் வினியோகம் செய்யும் பணியினை, அவசர அவசியம் கருதி, நகராட்சி சட்ட பிரிவு 15–ன் கீழ் மேற்கொண்டு, அதற்கான செலவுத் தொகை ரூ.42,600/– இந்நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்கியுள்ள விவரம் மன்றத்தின் பார்வைக்கும், தகவலுக்கும் வைக்கப்படுகிறது.
**அ.குறிப்பு** : மன்றம் பதிவு செய்யலாம்.

(ந.க.எண்.இ1/413–1/2015)

**தீர்மான எண் : 1179 – அ.கு. ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது. பதிவு செய்யப்பட்டது.**

**பொருள் எண். 8**

இந்நகராட்சிக்குட்பட்ட சாஸ்தாங்கரை பகுதியில் கதவு எண்.2/2பி–ல் தற்போது கட்டிட உரிமையாளர் வசிக்காத காரணத்தால் தற்காலிகமாக குடிநீர் குழாய் இணைப்பு எண்.141–ஐ துண்டிப்பு செய்யுமாறு மனுதாரர் திரு.ராஜசேகர் என்பவர் கேட்டுக் கொண்டுள்ளார். மேற்படி கட்டிடத்திற்கு சொத்துவரி மற்றும் குடிநீர் கட்டண வரி நிலுவை இல்லை. எனவே மேற்படி கட்டிடத்தின் குடிநீர் குழாய் இணைப்பை தற்காலிகமாக துண்டிப்பு செய்வது குறித்து மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.
**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ2/643/2015)

**தீர்மான எண் : 1180 – அ.கு. ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 9**

இந்நகராட்சிக்குட்பட்ட துறைமுகத்தெருவில் கதவு எண்.11/85–ல் தற்போது கட்டிட உரிமையாளர் வசிக்காத காரணத்தால் தற்காலிகமாக குடிநீர் குழாய் இணைப்பு எண்.1327–ஐ துண்டிப்பு செய்யுமாறு மனுதாரர் திரு.ஜேக்கப் என்பவர் கேட்டுக் கொண்டுள்ளார். மேலும் கட்டிடத்திற்கு சொத்துவரி மற்றும் குடிநீர் கட்டண வரி நிலுவை இல்லை. எனவே மேற்படி கட்டிடத்தின் குடிநீர் குழாய் இணைப்பை தற்காலிகமாக துண்டிப்பு செய்வது குறித்து மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.
**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ2/442/2015)

**தீர்மான எண் : 1181 – அ.கு. ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 10**

குளச்சல் நகராட்சியில் புதிய குடிநீர் இணைப்புகள் வழங்குவதற்கு 2015–16–ம் ஆண்டிற்கான தமிழ்நாடு குடிநீர் மற்றும் வடிகால் வாரியத்தின் Schedule of Rate இதுநாள் வரையிலும் பெறப்படாத காரணத்தால் பொதுமக்கள் நலன் கருதி உள்ளூர் விலைப்புள்ளி பெற்று கீழ்காணும் பொருள்களுக்கு திருத்திய மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. அதன் விவரம் பின்வருமாறு :

| வ.எண். | பொருட்களின் விவரம் | யூனிட் | 15 mm விட்டம் | 20 mm விட்டம் |
|---|---|---|---|---|
| 1 | ஜி.ஐ. பைப் | 1 மீட்டர் | 94.00 | 124.00 |
| 2 | ஜி.ஐ. கப்பிளிங் | 1 எண்ணம் | 18.00 | 20.00 |
| 3 | ஜி.ஐ.எல்போ | “ | 19.00 | 26.00 |
| 4 | ஜி.ஐ.பெண்ட் | “ | 20.00 | 30.00 |
| 5 | Brass screw down Bib cocks | “ | 200.00 | 249.00 |
| 6 | ஜி.ஐ. டீ (Tee) | “ | 29.00 | 45.00 |
| 7 | ஜி.எம். மெயின் காக் | “ | 196.00 | 243.00 |
| 8 | வாட்டர் மீட்டர் | “ | 1362.00 | 1752.00 |
| 9 | ஜி.ஐ.ரெடியூசர் 3/4” x ½” | “ | 16.00 | 22.00 |
| 10 | புளோ கண்ட்ரோல் வால்வு | “ | 150.00 | 170.00 |
| 11 | சி.ஐ. சர்பேஸ் பாக்ஸ் | “ | 210.00 | 210.00 |
| 12 | ஜி.ஐ. சாடில் | “ | 90.00 | 90.00 |
| 13 | மேசன்டிரி சேம்பர் | “ | 686.00 | 686.00 |
| 14 | ஜி.எம். வீல் வால்வு | “ | 251.00 | 343.00 |
| 15 | எம்.எஸ். கிளாம்பு | “ | 6.00 | 7.00 |
| 16 | ஜி.எம். செக் வால்வு | “ | 251.00 | 343.00 |
| 17 | சி.ஐ.செக் நெட் | “ | 11.00 | 16.00 |

| | | | | |
|---|---|---|---|---|
| 18 | ஜி.ஐ.பெரூல் | “ | 308.00 | 429.00 |
| 19 | ஜி.ஐ. நிப்பிள் | “ | 35.00 | 35.00 |
| 20 | ஜி.ஐ. யூனியன் | “ | 45.00 | 56.00 |
| 21 | ஜி.ஐ. பைப் பதித்தல் | 1 மீ | 12.00 | 12.00 |
| 22 | ஜி.ஐ. பைப் மரை போடுத்ல் | 1 எண்ணம் | 8.00 | 8.00 |
| 23 | பெரூல், சாடில் .யூனியன் பொருத்துதல். | :” | 15.00 | 15.00 |
| 24 | மீட்டர் பொருத்துதல் | “ | 46.00 | 46.00 |
| 25 | மண் தோண்டுதல் | 1 மீட்டர் | 131.15 | 131.15 |
| 26 | மேற்பார்வை கட்டணம் | | மொத்த தொகையில் 15 சதவீதம் | |
| 27 | குறைந்தபட்ச தொகை | | 750.00 | 750.00 |

மேலும் குழாய் பதிக்க தோண்டப்படும் இடத்தை சீரமைப்பதற்காக ஏற்கனவே நிர்ணயிக்கப்பட்டுள்ள தொகையில் 5% உயர்வு செய்து தற்போது நிர்ணயம் செய்யப்பட்டுள்ள தொகை குறித்த விவரம் பின்வருமாறு :

| வ.எண். | சாலையின் தன்மை | 0.30 மீட்டர் நீளத்திற்கு ரூ. | 30. 90 மீட்டர் நீளத்திற்கு ரூ. |
|---|---|---|---|
| 1 | சிமெண்ட் தளம் | 3319.05 | 4083.45 |
| 2 | தார் சாலை | 2871.75 | 3638.25 |
| 3 | கருங்கல் சல்லி சாலை | 1340.85 | 2107.35 |

மேற்கண்ட விலை விகிதத்தில் இனிமேல் வழங்கப்படவுள்ள குடிநீர் இணைப்பிற்கான திருத்திய மதிப்பீட்டை இந்நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று குடிநீர் இணைப்பு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**அ.குறிப்பு** : அவசர அவசியம் கருதி குடிநீர் இணைப்பிற்கான திருத்திய மதிப்பீட்டை இந்நகர் மன்றத் தலைவரின் முன்அனுமதி பெற்று குடிநீர் இணைப்பு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண்.இ2/7063/2011)

**தீர்மான எண் : 1182 – அ.கு. ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 11**

இந்நகராட்சிக்குட்பட்ட கீழ்காணும் பகுதிகளில் அமைந்துள்ள கட்டிடங்களின் சொத்துவரி, குடிநீர் கட்டணம் நிலுவைத் தொகை செலுத்தப்படாத காரணத்தினால் 31.03.2015 முதல் குடிநீர் இணைப்பு துண்டிப்பு செய்யப்பட்டுள்ள விவரம் மன்றத்தின் பார்வைக்கும், தகவலுக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | கட்டிட உரிமையாளர் பெயர் | கதவு எண். | வரிவிதிப்பு எண். | நிலுவை விபரம் | நிலுவைத் தொகை |
|---|---|---|---|---|---|
| 1 | திரு. அல்லேசி துறைமுகத்தெரு | 14/58 | 3976<br><br>1694 | சொத்துவரி<br>2004–05 I முதல் 2015–16<br>குடிநீர் கட்டணம்<br>2013–14 முதல் 2015–16 | ரூ.<br>1428/–<br><br>648/– |
| 2 | திரு.தேசியவிநாயகம் பிள்ளை<br>ஆண்டிப்பிள்ளை தெரு | 5/18 | 1127<br><br>671 | சொத்துவரி<br>2006–07 முதல் 2015–16<br>குடிநீர் கட்டணம்<br>2006–07 நான்காவது காலாண்டு முதல் 2015–16 முடிய. | ரூ.<br>1264/–<br><br>5898/– |

**அ.குறிப்பு** : மன்றம் பதிவு செய்யலாம்.

(ந.க.எண்.இ2/471/2015)

**தீர்மான எண் : 1183 – அ.கு. ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது. பதிவு செய்யப்பட்டது.**

**பொருள் எண். 12**

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட கீழத்தெரு பகுதியில் புதிய மின்கம்பம் நட்டு தெருவிளக்கு அமைக்க மதிப்பீட்டு தொகை ரூ.12,785/– செலுத்த உதவி மின் பொறியாளர் ந.க.எண். உ.பெ./விநி.1/குள/கோ.கட்டு/அ.207/15 நாள் 09.04.2015–ன்படி தெரிவித்துள்ளார்கள். எனவே மேற்படி தொகை செலுத்துவது குறித்து மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.
**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ2/4378/2010)

**தீர்மான எண் : 1184 – அ.கு. ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 13**

இந்நகராட்சிக்கு சொந்தமான லியோன் நகர் உரக்கிடங்கில் நிறைந்துள்ள குப்பைகளை அப்புறப்படுத்தும் பணியினை மேற்கொள்வதற்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.1,80,000/–க்கு இந்நகர்மன்றம் தனது தீர்மானம் எண்.1125 நாள் 26.02.2015–ன் மூலம் ஏகனவே ஒப்புதல் வழங்கியுள்ளது. அதன் அடிப்படையில் 18.04.2015–ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த விவரம் பின்வருமாறு :

| | | |
|---|---|---|
| 1. | M/s.Matha Earth Movers,<br>Prop.V.Joseph,<br>Kalimar, Colachel. | மதிப்பீட்டு விகிதம். |
| 2. | M/s.Gobika Earth Movers,<br>Prop.R.Gobakumar,<br>Sasthankarai, Colachel. | மதிப்பீட்டைவிட 6.67% அதிகம். |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், M/s.Matha Earth Movers, Colachel நிறுவனம் அளித்துள்ள மதிப்பீட்டு விகித ஒப்பந்தப்புள்ளியை ஏற்று, பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.
**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்

(ந.க.எண். இ1/1368–1/2014)

**தீர்மான எண் : 1185 – அ.கு. ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது. குறைந்த ஒப்பந்நத புள்ளி ஏற்று கொள்ளப்பட்டது.**

**பொருள் எண். 14**

இந்நகராட்சியில் வறட்சி நிவாரணம் 2015–16–ன்கீழ் தேர்வு செய்யப்பட்ட பணிகளுக்கு இந்நகர்மன்றம் தனது தீர்மானம் எண்.1151 நாள் 31.03.2015–ன் மூலம் ஏற்கனவே ஒப்புதல் வழங்கிள்ளது. அதன் பின்னர் மேற்படி பணிகளை இந்நகராட்சி பொதுநிதியில் மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்ட நிலையில், இந்நகராட்சியில் போதுமான நிதி ஆதாரம் இல்லாத நிலையினை கருத்தில் கொண்டு, மேற்படி பணிகளில் ஒன்றான, இந்நகராட்சிக்குட்பட்ட வெள்ளிப்பிள்ளையார் கோவில் சம்பு முதல் சிங்காரவேலர் காலனி மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி வரை 110 mm பிவிசி குடிநீர் குழாய் அமைக்கும் பணியினை ரூ.3.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்வதற்கு, அவசர அவசியம் கருதி, இந்நகர்மன்றத் தலைவரின் முன்அனுமதி பெற்று 18.04.2015 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த விவரம் பின்வருமாறு :

| | | |
|---|---|---|
| 1. | திரு.C. சந்திரசேகர்,<br>ஒப்பந்தத்தாரர் | மதிப்பீட்டைவிட 0.04% குறைவு. |
| 2. | திரு.C. செல்லநாடார்,<br>ஒப்பந்தத்தாரர் | மதிப்பீட்டைவிட 3.16% அதிகம். |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், திரு.C.சந்திரசேகர், ஒப்பந்தத்தாரர் மதிப்பீட்டை விட 0.04% குறைவாக அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளிக்கு பணியின் அவசியத்தை கருத்தில் கொண்டு இந்நகர்மன்றத் தலைவரின் முன்அனுமதி பெற்று, பணி உத்தரவு வழங்கியுள்ளதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.
**அ.குறிப்பு** : வறட்சி காலத்தில் பொது மக்களுக்கு சீரான குடிநீர் வழங்கும் பொருட்டு, பணியின் அவசர அவசியத்தை கருத்தில் கொண்டு, இந்நகர்மன்றத் தலைவரின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கும், திரு.C.சந்திரசேகர், ஒப்பந்தத்தாரர் மதிப்பீட்டை விட 0.04%

குறைவாக அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளிக்கு இந்நகர்மன்றத் தலைவரின் முன்அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதற்கும், மேற்படி பணிக்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.3.00 இலட்சத்தை இந்நகராட்சி பொதுநிதியின்கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்

(ந.க.எண். இ1/519/2015)

**தீர்மான எண் : 1186 – அ.கு. ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 15**

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.15–ல் Universal Design Toilet கட்டுவதற்கு, அப்பகுதி மக்கள் எதிர்ப்பு தெரிவித்ததை தொடர்ந்து, மேற்படி பணிக்காக இந்நகர்மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று 03.03.2015 அன்று வழங்கப்பட்ட பணி உத்தரவை இந்நகர்மன்றம் தனது தீர்மானம் எண்.1149 நாள் 31.03.2015–ன் மூலம் ரத்து செய்தது. அதன் பின்னர் திருநெல்வேலி மண்டல செயற்பொறியாளர் அவர்களின் அறிவுரையின்படி, மாற்று இடம் தேர்வு செய்வதற்கு இந்நகர்மன்றத் தலைவரின் முன்அனுமதி பெறப்பட்டது. இந்நிலையில், துறைமுகப் பாலம் அருகில் நவீன கழிப்பிடம் கட்டுவதற்கு அப்பகுதி மக்களால் கோரிக்கை விடுக்கப்பட்டதால், பொது மக்களின் வேண்டுகோளை ஏற்று, பொதுமக்கள் அதிகம் கூடும் துறைமுகப் பாலம் அருகில் சர்வே எண்.E-198-ல் ரூ.10.00 இலட்சம் மதிப்பீட்டில் Universal Design Toilet கட்டுவதற்கு, பணியின் தாமதத்தை தவிர்க்கும் பொருட்டு, நகர்மன்றத் தலைவரின் முன்அனுமதி பெற்று, 18.04.2015 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த விவரம் பின்வருமாறு :

| | | |
|---|---|---|
| 1. | திரு.S.ஜாண்றோஸ் ஒப்பந்தத்தாரர் | மதிப்பீட்டைவிட 0.02% குறைவு. |
| 2. | திரு.C.செல்லநாடார், ஒப்பந்தத்தாரர் | மதிப்பீட்டைவிட 0.54% அதிகம். |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், திரு.S.ஜாண்றோஸ், ஒப்பந்தத்தாரர் மதிப்பீட்டைவிட 0.02% குறைவாக அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளியை ஏற்று, பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு**: பொதுமக்கள் நலனை கருத்தில் கொண்டு, துறைமுகப் பாலம் அருகில் சர்வே எண். E-198-ல் மாற்று இடம் தேர்வு செய்யப்பட்டுள்ளதற்கும், பணியின் தாமதத்தை தவிர்க்கும் பொருட்டு, இந்நகர்மன்றத் தலைவரின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கும், திரு.S.ஜாண்றோஸ், ஒப்பந்தத்தாரர் மதிப்பீட்டை விட 0.02% குறைவாக அளித்துள்ள ஒப்பந்தப் புள்ளியை ஏற்று, பணி உத்தரவு வழங்கவும் மன்றம் அனுமதி வழங்கலாம்

(ந.க.எண். இ1/2669/2013)

**தீர்மான எண் : 1187 – அ.கு. ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**
**குறைந்த ஒப்பந்த புள்ளி ஏற்று கொள்ளப்பட்டது.**

**பொருள் எண். 16**

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.2 சி.எம்.சி. காலனியில் பாலத்தன்கரை குடிநீரேற்றும் நிலையம் அருகில் பழுதடைந்த நிலையில் உள்ள சிறுபாலத்திற்கு மாற்றாக புதிதாக சிறுபாலம் அமைப்பதற்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.1,00,000/–க்கு இந்நகர்மன்றம் தனது தீர்மானம் எண்.1165 நாள் 31.03.2015–ன் மூலம் ஏற்கனவே ஒப்புதல் அளித்துள்ளது. அதன் அடிப்படையில் 18.04.2015 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த விவரம் பின்வருமாறு :

| | | |
|---|---|---|
| 1. | திரு.T. சுகுமாரன், ஒப்பந்தத்தாரர் | மதிப்பீட்டைவிட 0.07% குறைவு. |
| 2. | திரு. C.தேவராஜ், ஒப்பந்தத்தாரர் | மதிப்பீட்டைவிட 0.55% அதிகம். |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், திரு.T. சுகுமாரன், ஒப்பந்தத்தாரர் மதிப்பீட்டை விட 0.07% குறைவாக அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளியை ஏற்று, பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்

(ந.க.எண். இ1/663/2015)

**தீர்மான எண் : 1188 – அ.கு. ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 17**

இந்நகராட்சிக்குட்பட்ட பேருந்து நிலைய கடை எண்.5, 6 மற்றும் கலைஞர் கருணாநிதி கடை எண். 4, 5, 3 ஆகிய கடைகளுக்கு 31.03.2015 மற்றும் 30.04.2015–வுடன் மூன்றாண்டு உரிமம் முடிவடைந்துள்ளதால், 01.04.20015 முதல் 31.03.2018 வரையும் மற்றும் மின்சார வாரியத்திற்கு 01.05.2015 முதல் 30.04.2018 வரை மேலும் மூன்றாண்டுகளுக்கு கடை வாடகை உரிமம் நீட்டிப்பு செய்து வாடகைத் தொகையில் 15% உயர்வு செய்யவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண். | வணிக வளாகத்தின் பெயர் | வரிவிதிப்பு எண். | உரிமைதாரர் பெயர் | தற்போதைய வாடகை தொகை. | 15% உயர்வு செய்த தொகை | உயர்வு செய்யப்பட்ட பின் வாடகை தொகை |
|---|---|---|---|---|---|---|
| 1 | பேருந்து நிலைய கடைகள் | 2006005 | சககாய ஜாண் ஜில்ட் | 5,092 | 764 | 5,856 |
| 2 | “ | 2006006 | சககாய ஜாண் ஜில்ட் | 860 | 129 | 989 |
| 3 | கலைஞர் கருணாநிதி வணிக வளாகம். | 2011004 | மார்ஷல் பெலிக்ஸ் | 3,000 | 450 | 3,450 |
| 4 | “ | 2011005 | பெரிய சுவாமி | 6,000 | 900 | 6,900 |
| 5 | “ | 2009003 | மின்சார வாரியம் | 5,175 | 776 | 5,951 |

**அ.குறிப்பு**: மேற்படி வாடகைதாரர்களின் உரிமம் 31.03.2015 மற்றும் 30.04.2015–ல் முடிவடைந்துள்ளதால் மேலும் மூன்றாண்டுகளுக்கு நீட்டிப்பு செய்து 15% உயர்வு செய்யவும் மன்றம் அனுமதி வழங்கலாம்

(ந.க.எண். அ1/2035/2015)

**தீர்மான எண் : 1189 – அ.கு. ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

(ஒம்) அ.நசீர்,
நகர்மன்றத் தலைவர்
குளச்சல் நகராட்சி

**(உண்மை நகல்)**

ஆணையர்(பொ)
குளச்சல் நகராட்சி

# குளச்சல் நகராட்சி

குளச்சல் நகராட்சி மன்றத்தின் அவசரக்கூட்டம் 2015 ஏப்ரல் திங்கள் 23–ம் நாள் (23.04.2015) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு நகர்மன்ற கூட்ட அரங்கில் வைத்து நடைபெற்றது.

முன்னிலை:
நகர்மன்ற தலைவர்
குளச்சல் நகர்மன்றம்.

**பொருள் எண். 1**

இந்நகராட்சியில் கட்டிட வரைபட அனுமதி கோரி வரும் விண்ணப்பங்கள் மீது அபிவிருத்திக் கட்டணமாக நிலங்களுக்கு சதுர மீட்டர் ஒன்றிற்கு ரூ.1.00 வீதமும், கட்டிடங்களுக்கு சதுர மீட்டருக்கு ரூ.2.50 வீதமும் வசூல் செய்யப்பட்டு வருகின்றது. மேற்படி அபிவிருத்திக் கட்டணம் நிர்ணயம் செய்து சுமார் 8 வருடங்கள் ஆகின்றது. தற்போது நகர் ஊரமைப்புத் துணை இயக்குநர், திருநெல்வேலி அவர்களின் கடிதத்தில் குளச்சல் உள்ளூர் திடடப் பகுதிக்கு புதியதாக அபிவிருத்திக் கட்டணம் நிர்ணயத்திட ஏதுவாக உள்ளூர் திட்ட குழும தீர்மானத்துடன் உத்தேச கட்டண விபரத்தினை அனுப்பி வைக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்படும் நிலங்களுக்கு அபிவிருத்திக் கட்டணம் சதுர மீட்டருக்கு ரூ.2.00 வீதமும், கட்டிடங்களுக்கு அபிவிருத்திக் கட்டணம் சதுர மீட்டருக்கு ரூ.5.00 வீதமும் நிர்ணயம் செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.
**அ.குறிப்பு** : மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.tpi/691/2015)

**தீர்மான எண் : 1190 – அ.கு. ஏற்று கொள்ளப்பட்டு நில அபிவிருத்தி கட்டணம் சதுர மீட்டருக்கு ரூ.2.00 வீதமும் கட்டிடங்களுக்கு சதுர மீட்டருக்கு ரூ. 4.00 வீதமும் நிர்ணயம் செய்திட ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 2**

Tamil Nadu Urban Infrastructure Financial Services Limited (TNUIFSL) சென்னை நிறுவனத்தின் Kfw Grant II –ன்கீழ், இந்நகராட்சிக்குட்பட்ட தேவையான இடங்களில் வடிகால் ஓடை அமைப்பதற்கு விரிவான திட்ட அறிக்கை தயார் செய்வதற்கும், தொடர் நடவடிக்கை மேற்கொள்வதற்கும், இந்நகர்மன்றம் தனது தீர்மானம் எண்.313 நாள் 31.07.2012–ன் மூலம் ஏற்கனவே ஒப்புதல் அளித்துள்ளது. அதன் அடிப்படையில் M/s.Voyants Solutions Pvt. Ltd., சென்னை நிறுவனத்தின் மூலம் விரிவான திட்ட அறிக்கை தயார் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதில், இந்நகராட்சி குடிநீர் ஆதாரங்களை மேம்படுத்தவும், கடல்நீர் உட்புகுவதை தடுப்பதற்கும், நிலத்தடி நீர் மட்டத்தை உயர்த்தும் வகையிலும், நகராட்சி பகுதியில் அமைந்துள்ள மிக பழமையான மற்றும் முக்கியத்துவம் வாய்ந்த ஏ.வி.எம்.கால்வாய் மற்றும் பாம்பூரி வாய்க்கால் ஆகியவற்றை துார் வாரி, ஆக்கிரமிப்புகளை அகற்றி விரிவுப்படுத்தி, தடுப்பணைகள் கட்டவும், தேவையான பகுதிகளில் வடிகால் ஓடை அமைக்கவும் ரூ.83.02 கோடியில் பணிகள் மேற்கொள்வதற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேலும் மேற்படி பணிகளுக்கான விரிவான திட்ட அறிக்கையில், பணிகள் மேற்கொள்ளப்படும் பகுதிகளுக்கான ஒரு வருட பராமரிப்பு செலவு, சுற்றுச்சூழல் மேலாண்மை செலவினங்கள் மற்றும் மாற்று குடியிருப்பு – வாழ்வாதார மேம்பாடு ஆகியவற்றிற்கான செலவினம் ஆகியவற்றிற்கு ரூ.11.96 கோடி ஆகும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, குளச்சல் நகராட்சியின் நிதிநிலை, நகரமக்களின் வாழ்வாதார மேம்பாடு ஆகியவற்றை கருத்தில் கொண்டு, மேற்படி பணிகளை செயல்படுத்துவதற்கு தேவையான மொத்த மதிப்பீட்டுத் தொகை ரூ.94.98 கோடியை முழு மானியமாக நிதி ஒதுக்கீடு செய்ய கேட்டு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு கடிதம் அனுப்புவதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.
**அ.குறிப்பு** : பணியின்முக்கியத்துவத்தை கருத்தில் கொண்டு மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். இ1/387/2012)

**தீர்மான எண் : 1191 – அ.கு. ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 3**

இந்நகராட்சிக்குட்பட்ட அனைத்து வார்டுகளிலும் உள்ள சாலைகள், வடிகால் ஓடைகள், மேல்மூடிகள், சிறுபாலங்கள், குடிநீர் வால்வு பிட்டுகள் ஆகியவற்றின் வருடாந்திர பராமரிப்பு பணிகளுக்கான மதிப்பீட்டு தொகை ரூ.4,00,000/–க்கு, இந்நகர்மன்றம் தனது தீர்மானம் எண்.1163 நாள் 31.03.2015–ன் மூலம் ஏற்கனவே ஒப்புதல் வழங்கியுள்ளது. அதன் அடிப்படையில் 18.04.2015–ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த விவரம் பின்வருமாறு :

| | | |
|---|---|---|
| 1. | திரு.S.ஜாண்றோஸ், ஒப்பந்தத்தாரர் | மதிப்பீட்டைவிட 0.02% குறைவு. |
| 2. | திரு.C.செல்லநாடார், ஒப்பந்தத்தாரர் | மதிப்பீட்டைவிட 0.13% அதிகம். |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், திரு.S.ஜாண்றோஸ், ஒப்பந்தத்தாரர் மதிப்பீட்டைவிட 0.02% குறைவாக அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளியை ஏற்று, பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு**: மன்றம் அனுமதி வழங்கலாம்

(ந.க.எண். இ1/662/2015)

**தீர்மான எண் : 1192 – அ.கு. ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 4**

இந்நகராட்சிக்குட்பட்ட துறைமுகத்தெரு வார்டு எண்.15–ல் காணிக்கை மாதா திருமண மண்டபம் அருகில் பெட்ரோல் பம்ப் எதிர்புறம் அமைந்துள்ள வீட்டு எண்.18/4–ன் அருகில் உள்ள தெருவில் வடிகால் ஓடை கட்டப்பட்டு 20 ஆண்டுகளுக்கு மேலாகி விட்டதால், வடிகால் ஓடை மிக மோசமாக பழுதடைந்து, கழிவுநீர் மற்றும் மழைநீர் செல்ல முடியாமல் சாலையின் மேற்பரப்பில் செல்வதாலும், மேலும் அப்பகுதி சாலை மிகவும் குறுகலாக உள்ளதால், பொதுமக்கள் நடந்து செல்வதற்கு மிகவும் இடையூறு ஏற்பட்டு வருவதாலும், சுகாதார சீர்கேடு ஏற்படுவதை தவிர்க்கும் பொருட்டும், மேற்படி பகுதியில் புதிதாக மூடியுடன் கூடிய வடிகால் ஓடை அமைப்பதற்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.1,70,000/–க்கும், மேற்படி பணியினை இந்நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்வதற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு**: மன்றம் அனுமதி வழங்கலாம்

(ந.க.எண். இ1/874/2015)

**தீர்மான எண் : 1193 – அ.கு. ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 5**

இந்நகராட்சிக்குட்பட்ட துறைமுகத்தெருவில் சைமன்காலனி பாலம் அருகில் வார்டு எண்.13 மற்றும் 15–க்கு உட்பட்ட பகுதியில் நகராட்சியால் கட்டப்பட்ட பொதுக்கழிப்பிடம் மிக மோசமாக பழுதடைந்து, பொதுமக்கள் பயன்படுத்த முடியாத நிலையில் இருந்ததால், மேற்படி கழிப்பிடமானது இடித்து அகற்றப்பட்டது. அதன் பின்னர் மேற்படி இடத்தில் Universal Design Toilet அமைப்பதற்கு பொதுமக்கள் எதிர்ப்பு தெரிவித்ததால், அதற்கு மாற்றாக வேறும் இடம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. தற்போது கழிப்பிடம் இடித்து அகற்றப்பட்ட இடத்தில் செடி, கொடிகள் முளைத்துள்ளதால், அவற்றிலிருந்து விஷ பூச்சிகள் அருகில் உள்ள குடியிருப்புக்குள் நுழைவதாக பொதுமக்களால் புகார் தெரிவிக்கப்பட்டுள்ளதாலும், மேற்படி இடத்தில் ஆக்கிரமிப்புக்களை தடுப்பதற்காகவும், காலியாகவுள்ள நகராட்சி இடத்தில் Chain link fencing அமைத்து, நகராட்சிக்கு சொந்தமான இடம் என பெயர் பலகை அமைப்பதற்கு ஆகும் மதிப்பீட்டுத் தொகை ரூ.1,40,000/–க்கும், மேற்படி பணியினை இந்நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு**: மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். இ1/875/2015)

**தீர்மான எண் : 1194 – அ.கு. ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 6**

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.12–ல் கதவு எண்.13/68–ன் பின்புறம் அமைந்துள்ள நகராட்சிக்கு சொந்தமான கிணற்றில் மேல்மூடி அமைக்கவும், அதே பகுதியில் அமைந்துள்ள குடியிருப்புகளின் அருகில் கடல் அரிப்பை தவிர்ப்பதற்காக Anti Sea Erosion துறையால் போடப்பட்டுள்ள பெரிய கற்களால் கழிவுநீர் செல்ல முடியாமல் தேங்கி நிற்பதால், சுகாதார சீர்கேடு ஏற்படுவதை தவிர்க்கும் பொருட்டும், ஜே.சி.பி. மூலம் கற்களை அகற்றி மூடியுடன் கூடிய வடிகால் ஓடை அமைக்கும் பணியினை மேற்கொள்வதற்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.1,60,000/–க்கும், மேற்படி பணியினை இந்நகராட்சி பொதுநிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு**: மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். இ1/318–1/2015)

**தீர்மான எண் : 1195 – அ.கு. ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 7**

இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவிற்கு தேவையான கிருமி நாசினிகள் இருப்பில் குறைவாக உள்ளதால் பொது சுகாதார பயன்பாட்டிற்கு தேவையான கீழ்காணும் பொருட்களை வாங்குவதற்கு உத்தேச செலவுத் தொகை ரூ.1,50,000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

(1) பிளீச்சிங் பவுடர் – 2000 கிலோ
(2) நீர்த்த சுண்ணாம்பு தூள் – 2500 கிலோ
(3) பினாயில் – 1000 லிட்டர்

**அ.குறிப்பு**: மன்றம் அனுமதி வழங்கலாம்

(ந.க.எண். எச்1/1388/2009)

**தீர்மான எண் : 1196 – அ.கு. ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 8**

கன்னியாகுமரி மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் அவர்களின் அலுவலகக் கடிதம் எண்.4/செமதொ/2015 நாள் 07.04.2015–ன்படி, இம்மாவட்டத்தில், நாகர்கோவில் நகராட்சி மைதானத்தில் (அனாதைமடம்) முதன் முறையாக அரசு பொருட்காட்சி ஏப்ரல் 18 முதல் தொடர்ந்து 45 நாட்கள் நடைபெறுகிறது. கடிதத்துடன் இணைக்கப்பட்டுள்ள அரசாணை எண்.65 நாள் 07.04.2015–ன்படி, நாகர்கோவில் நகராட்சி நீங்கலாக மீதமுள்ள மூன்று நகராட்சிகளும் இணைந்து கண்காட்சி அரங்கினை அமைக்கவும், அதற்கான செலவுத் தொகையில் அரசின் பங்குத் தொகை மொத்தம் ரூ.66,000/– எனவும், இதனை 3 நகராட்சிகளும் (ரூ.22,000/– என) பிரித்துக் கொள்ளவும் குறிப்பிடப்பட்டுள்ளது. இதில் இந்நகராட்சியின் சார்பாக விளக்க கண்காட்சி அரங்கு அமைக்க ஆகும் உத்தேச செலவுத் தொகை ரூ.30,000/– என கணக்கிடப்பட்டுள்ளது. எனவே, இச்செலவினை தற்சமயம் பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும், அரசு நிதி பெறப்பட்ட பின்னர் மேற்படி செலவுத் தொகையினை பொது நிதிக்கு மாற்றம் செய்து கொள்ளவும், அரசின் பங்குத் தொகை போக மீதமுள்ள தொகையினை இந்நகராட்சியின் பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு**: மன்றம் அனுமதி வழங்கலாம்

(ந.க.எண். ச.அ/775/2015)

**தீர்மான எண் : 1197 – அ.கு. ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 9**

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 24–ல் காமராஜர் சாலையில் இசக்கி அம்மன் கோவில் அருகில் உள்ள குறுகிய தெருவில் வடிகால் ஓடை இல்லாத காரணத்தால், மழை காலங்களில் மழைநீர் வெளியே செல்ல முடியாத நிலை உள்ளது. மேலும் மேற்படி தெரு மேட்டுப் பகுதியில் அமைந்துள்ளதால் மேட்டுபகுதியின் மழைநீர் கீழ் பகுதியில் உள்ள வீடுகளுக்குள் செல்வதாக பொதுமக்களிடமிருந்து புகார் வரப்பெற்றுள்ளது. எனவே பொதுமக்கள் நலன் கருதி, மேற்படி குறுகலான தெருவின் கீழ்பகுதியில் மழைநீர் செல்லாதவாறு தடுப்பு சுவர் (Kerbwall) அமைத்து, சிமெண்ட் கான்கிரீட் தளம் அமைப்பதற்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.80,000/–க்கும்,

மேற்படி பணியினை இந்நகராட்சி பொதுநிதியின் கீழ் மேற்கொள்வதற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு**: மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். இ1/877/2015)

**தீர்மான எண் : 1198 – அ.கு. ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

(ஒம்) அ.நசீர்,
நகர்மன்றத் தலைவர்
குளச்சல் நகராட்சி

(உண்மை நகல்)

ஆணையர்(பொ)
குளச்சல் நகராட்சி